# புதிய அரசியலமைப்பொன்றிற்கான பிரதான பரிந்துரைகள் 2020

## 01. அரசின் தன்மை

இலங்கை பல்லின, பல மதங்களைக் கொண்ட பன்மைத்துவ நாடாக அங்கீகரிக்கப்பட வேண்டும்.

இலங்கையில் இறைமை மக்களுக்குரியதாகவும், அதனைப் பாராதீனப்படுத்த முடியாததாகவும் இருக்கும். இதில், ஆட்சித் தத்துவங்கள் (சட்டவாக்கத்துறை, நிறைவேற்றுத்துறை, நீதித்துறை) வாக்குரிமை மற்றும் அடிப்படை உரிமைகள் என்பன உள்ளடங்கும். அதன்படி, இலங்கை ஒரு சுதந்திரமானதும் இறைமைகொண்ட சுயாதீனமானதுமான குடியரசாகவும், அரசியலமைப்பால் நிர்ணயிக்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தும் மத்திய மற்றும் மாகாண சபைகள் மற்றும் உள்ளூர் அதிகாரசபைகளைக் கொண்ட ஒரு ஒற்றையாட்சி நாடாகவும் இருக்க வேண்டும்.

இலங்கையின் தேசிய கொடி, தேசியக் கீதம், தேசிய தினம் இவ்வாறே தொடர்ந்திருமிருக்க வேண்டும்.

இலங்கையின் அனைத்து இனத்தவர்களுக்கும் அனைத்து மதங்களுக்கும் சமமாக நடாத்தப்பட வேண்டும்.

வம்சாவளி அல்லது பதிவு ஆகிய எந்த அடிப்படையிலாயினும் குடிமக்களாகவிருப்பவர்கள் சமமாக நடாத்தப்பட வேண்டும்.

## 02. அடிப்படை உரிமைகள்

தற்போது காணப்படும் அடிப்படை உரிமைகள் அத்தியாயம் விரிவாக்கப்படுதல் வேண்டும்.

வாழுவதற்கான உரிமை அதில் உள்ளடக்கப்பட வேண்டும். இனம், மதம், குலம், வகுப்பு, பால்நிலை மட்டுமன்றி திருமண நிலை, தாய்மை, மொழி, வயது, சமூக அந்தஸ்து, பாலியல் நாட்டம் மற்றும் வாழ்க்கைத் துணையை இழத்தல் ஆகிய எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பாரபட்சமான விதத்தில் நடாத்தப்படலாகாது.

கல்வி, சுகாதாரம், உணவு மற்றும் நீர், சமூகப் பாதுகாப்பு, பசி இல்லாமல் வாழ்வதற்கான உரிமை மற்றும் வாழ்வாதார உரிமை ஆகியன அடிப்படை உரிமைகளில் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

காணாமல் போகாதிருப்பதற்கான உரிமை, நீதிக்கான உரிமை, தகவலுக்கான உரிமை ஆகியன உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

பாலியல் நோக்கு அடிப்படையில் பாகுபாடு காட்டக் கூடாது.

பெண் உரிமைகளுக்கு உத்தரவாதம் அளிக்கப்படும் அடிப்படை உரிமைகள் உள்ளடக்கப்பட வேண்டும்.

## 03. மொழி

சிங்களமும் தமிழும் அரசகரும மொழிகளாவதுடன் சைகை மொழி மேலதிக மொழியாக அங்கீகரிக்கப்பட வேண்டும். ஆங்கில மொழி இணைப்பு மொழியாதல் வேண்டும்.

சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் கல்வியில் கட்டாயப்படுத்தப்பட வேண்டும்.

இலங்கை அரசியலமைப்பின் iv ஆம் அத்தியாயத்தின் 18 ஆம் உறுப்புரையானது ''சிங்களமும் தமிழும் இலங்கையின் அரகரும மொழிகளாதல் வேண்டும்'' என மாற்றமடைய வேண்டும்

சிங்களமும் தமிழும் இலங்கையின் அனைத்து மாவட்டங்களிலும் நிருவாக மற்றும் நீதிமன்ற மொழிகளாதல் வேண்டும்.

மொழிக் கணக்காய்வொன்றிற்குப் பொறிமுறையொன்று தயாரிக்கப்படுதல் வேண்டும்.

**அரச கொள்கையின் வழிகாட்டிக் கோட்பாடுகள்**

இலங்கையின் குடிமக்களாக வாழும் உள்நாட்டு மக்கள் பிரிவாக பெருந்தோட்டப் பகுதிகளில் உள்ள தமிழ் மக்களைப் பெயரிட்டு பிரகடனப்படுத்த வேண்டும்.

இனம், மொழி, மதம், குலம் போன்றவற்றின் அடிப்படையில் எந்தக் கொள்கையையும் பின்பற்றக்கூடாது.

(அ) ஏனைய சிறுபான்மையினருக்கும் நிலம், வீட்டுவசதி, வாழ்வாதாரம், கல்வி, சுகாதாரம் போன்ற உரிமைகளைத் தடையின்றி அனுபவிக்கும் உரிமை இருக்க வேண்டும்.

(ஆ) அரசாங்க நிலங்களை வழங்குகையில் அனைத்து இனத்தவர்களின் உரிமைகளும் பாரபட்சமின்றி உள்ளடக்கப்பட வேண்டும்.

(இ) அபிவிருத்திக்காக தனியார் நிலங்களை கையகப்படுத்தும் போது, மக்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும்.

(ஈ) காலனித்துவத்திலும் வாழ்வாதார நோக்கத்திற்காகவும், சமூகத்தின் அவதானத்திற்கு உட்படுத்தப்படாத மற்றும் ஏழை மக்கட் பிரிவினருக்கு நிலத்தைப் பெற்றுக்கொள்வதற்கான உரிமை பாதுகாக்கப்பட வேண்டும்.

(உ) அனைத்து ஒப்புதல் நிலைமைகளிலும், நீதிமன்ற உத்தரவின்படி நியாயமான இழப்பீடு வழங்காமல் எந்தவொரு நபரிடமிருந்தும் சொத்து பறிமுதல் செய்யப்படக்கூடாது.

பெண்களின் அரசியல், சமூக மற்றும் வாழ்வாதார நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கான உரிமை நிறுவப்பட வேண்டும்.

சமூக-பொருளாதார, அரசியல் மற்றும் கலாசார அம்சங்களில் பின்தங்கியிருக்கும் சிறுபான்மையினர், பெண்கள் மாற்றுக் கருத்துக்கொண்டோரின் பங்களிப்பை நிர்வாக மற்றும் அரசியல் துறைகளில் நிறுவிக் கோட்டா முறையை அறிமுகப்படுத்துதல்.

## நிலம் மற்றும் சொத்துக்கள்

தற்போதுள்ள அரசியலமைப்பில் சொத்துரிமைக்கு உத்தரவாதம் இல்லை. நல்லிணக்கத்திற்கு நில மோதல்களைத் தீர்ப்பது அவசியமாகும். ஒவ்வொரு நபருக்கும் தனித்தனியாக அல்லது கூட்டாக சொத்துக்களை வைத்திருப்பதற்கான உரிமை, சொத்தின் பயன்பாட்டை நிர்வகிக்கும் சட்டங்களின் அடிப்படையில் ஒரே விதமான உரிமைகளைக் கொண்டிருக்க வேண்டும். நியாயமான நீதிமன்ற உத்தரவினாலன்றி, வேறு எந்த நபரையும் அவரது வீட்டிலிருந்து சட்டவிரோதமாக வெளியேற்றக் கூடாது. வீடு அழிக்கப்படவும்கூடாது.

பெருந்தோட்டப் பகுதிகளில் உள்ள தமிழ் மக்களின் நில உரிமையை அரசியலமைப்பின் மூலம் உறுதிப்படுத்துவதன் மூலம் நிலக் கொள்கை நில உரிமையை சட்டரீதியானதாக்கி அவர்கள் தற்போது வசிக்கும் வீடுகளையும் நிலங்களையும் அவர்களிடம் ஒப்படைக்க வேண்டியது அவசியமானதாகும்.

இந்த நோக்கங்களுக்காக, நிலம் தொடர்பான அபிவிருத்தி ஆணைக்குழுவொன்று அரசியலமைப்பினால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

## நிறைவேற்றுத்துறை

1990 ஆம் ஆண்டு முதல், ஒவ்வொரு தேர்தலிலும், இன்று காணப்படுவது போன்ற நிறைவேற்றதிகார சனாதிபதிப் பதவியை இல்லாதொழிக்க வேண்டும் என்ற பொதுவான ஒருமித்த கருத்து காணப்படுகின்றது.

தேர்தல் இன்றி, சனாதிபதி ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பாராளுமன்றத்தால் நியமிக்கப்பட வேண்டும்.

பாராளுமன்றத்தினால் ஒரு நிறைவேற்றதிகாரம் கொண்ட பிரதமர் நியமிக்கப்படுவது முக்கியமானதாகும். அதுபோன்றே, அந்நியமனத்திற்காக தேர்தலுக்கு முன்னர் ஒவ்வொரு அரசியல் கட்சியும் தனது பிரதமர் வேட்பாளரை தேர்தலுக்கு முன் பரிந்துரைக்க வேண்டும்.

பெரும்பான்மை உறுப்பினர் எண்ணிக்கையைக் கொண்ட அல்லது பெரும்பான்மையான உறுப்பினர்களின் விருப்பத்தை வெல்லக்கூடிய ஒருவர் நிறைவேற்றுப் பிரதமர் பதவிக்கு தகுதியானவர் ஆவார்.

தேவையான அமைச்சர்களின் எண்ணிக்கை சரியாக அரசியலமைப்பில் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

முதல் 4 1/2 ஆண்டுகளில் நாடாளுமன்றம் கலைக்கப்படுவது பின்வரும் சந்தர்ப்பங்களில் சாத்தியமாகும்,

1. வரவுசெலவுத் திட்டத்தை தோற்கடிப்பதன் மூலம்
2. வாக்களிக்காதவர்கள் உட்பட பாராளுமன்ற உறுப்பினர்களில் 2/3 க்கும் குறையாத எண்ணிக்கையினரால் அங்கீகரிக்கப்படும் பிரேரணையொன்றின் மூலம் பாராளுமன்றம் முன்னதாக கலைக்கப்பட வேண்டும் என வேண்டுகோள் விடுக்கப்பட்டால்

பாராளுமன்றத்தின் நம்பிக்கை உள்ளபோது பிரதமர் பதவி இராஜினாமாச் செய்தல், நோய்வாய்ப்படுதல், வேறு எந்த காரணத்திற்காகவும் அவர் பதவியில் இருந்து விலகினால் பாராளுமன்றத்தின் விசேட கூட்டத்தில் பிரதமரொருவரை நியமிக்க முடியும்.

## சட்டவாக்கத்துறை

நிறைவேற்றுப் பிரதமரொருவர் சட்டவாக்கத்துறை மூலம் நியமிக்கப்படுவதன் மூலமாக நிறைவேற்றுத்துறை மற்றும் சட்டவாக்கத்துறைகளுக்கிடையே முரண்பாடு ஏற்படாது.
ஐந்து வருடங்களுக்கொருமுறை பாராளுமன்றத் தேர்தல் மூலம் சட்டவாக்கத்துறை நியமிக்கப்படுதல் வேண்டும்.

## தேர்தல் முறை

பாராளுமன்ற உள்ளூர் அதிகாரசபைத் தேர்தல்கள் கேவியட் மற்றும் விகிதாசார அடிப்படையில் உருவாக்கப்பட வேண்டும். கேவியட் அமைப்பு காரணமாக ஒரு ஆசனத்திற்கு பொறுப்புக் கூற வேண்டிய பாராளுமன்ற உறுப்பினரொருவரை நியமிப்பது வாக்காளரின் பெறுமதி அதிகரிப்பதற்குக் காரணமாகின்றது.
முழு நாட்டிலும் அதிக எண்ணிக்கையிலான ஆசனங்களை வென்ற கட்சிக்கு குறித்த போனஸ் ஆசனங்கள் உரித்தாக வேண்டும்.
தேர்தல் முறையில் மக்களால் தெரிவுசெய்யப்படும் பிரதிநிதியின் பொதுமக்கள் சேவைச் செயற்பாடுகள் திருப்திகரமான முறையில் மேற்கொள்ளப்படாவிட்டால் அவரை அப்பதவியிலிருந்து நீக்குவதற்கான வாய்ப்பு வாக்காளருக்கு வழங்கப்பட வேண்டும். (Recall System)

## இரண்டாவது சபை

மாகாணங்களுக்கு உறுப்பாண்மை கிடைக்கக் கூடியவாறு சோல்பரி அரசியலமைப்பின் கீழ் காணப்பட்ட அதியுயர் பிரதிநிதிகள் சபையை நிறுவுவது முக்கியமானதாகும். இதற்கு கல்விகற்ற புத்திஜீவிகளை நியமிக்க முடியுமாவதுடன் நாட்டை ஆளுவதில் அவர்களை ஈடுபடுத்துவதன் மூலம், நாடு சரியான திசையில் பயணிக்க முடியும்.

இரண்டாவது சபை மூலம் அரசியலமைப்பினால் அல்லது சட்டத்தினால் பரிந்துரைக்கப்பட்ட கண்காணிப்பினை மேற்கொள்வதன் மூலம் அரச பொறிமுறைகளின் குறைபாடுகளைச் சரிசெய்ய முடியும்.
இரண்டாவது சபைக்குரிய உறுப்பினர்கள் நியமனமானது சட்டவாக்கத்துறையால் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## அதிகாரப் பரவலாக்கம், அதிகாரப் பகிர்வு

அதிகாரத்தின் பரவலாக்கலில், தற்போதுள்ள மாகாண சபைகளுக்கும் மத்திய அரசாங்கத்திற்கும் இடையிலான அதிகார சமநிலையை முறையாக பராமரிக்க வேண்டும். அதற்காக, தற்போது மத்திய அரசாங்கத்திற்கும் மாகாண சபைகளுக்கும் இடையிலான முரண்பாடுகளைத் தோற்றுவிக்கும் ஒருங்கிய நிரல் அகற்றப்பட்டு சரியாக மாகாண சபைகள் மற்றும் மத்திய அரசின் அதிகாரங்கள் தெளிவாக வரையறுக்கப்பட வேண்டும்.
மாகாண சபைக்கு நியமிக்கப்பட்ட ஆளுநர் ஒரு சுயாதீன நபராக இருப்பார். சட்டமன்றத்தால் அவர் நியமிக்கப்பட்டிருப்பது சுயாதீனத்தின் அடையாளமாக இருக்கலாம்.
சட்டமன்றத்தில் சிறுபான்மை குழுக்களின் பங்களிப்பு மற்றும் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்த, தற்போதுள்ள 9 மாகாணங்களின் ஏற்பாடுகள் போதுமானவை.

இனரீதியான மக்கள்தொகை அமைப்பைக் குறிக்க பொருத்தமான பொது பிரதிநிதித்துவ முறை உருவாக்கப்பட வேண்டும். இதற்காகத் தேர்தல் மாவட்டங்களை அடிப்படையாகக் கொண்ட விகிதாசார பிரதிநிதித்துவம் முக்கியமானதாகும்.
கிழக்கில் உள்ள முஸ்லிம்களுக்கும், மலைநாட்டிலுள்ள உள்ள தமிழர்களுக்கும் மாகாண சபையினுள் மற்றும் மத்திய அரசின் செயற்பாடுகளில் பொருளாதார, சமூக-கலாசார, மத மற்றும் குடியியல் செயற்பாடுகள் தொடர்பில் பணியாற்றுவதற்கு அதிகாரம் காணப்படுவது முக்கியமானதாகும்.
மொழி, இனம், மதம் அல்லது இனத்தின் அடிப்படையில் அதிகாரத்தின் ஒரு அலகு உருவாக்கக்கூடாததுடன் அனைவருக்கும் இலங்கை அடையாளம் இருக்க வேண்டும்.
உள்ளூராட்சியில், பிரதேச சபைகள் மற்றும் நகர சபைகள், மாநகர சபை நடவடிக்கைகளில் பங்காளிகளாக இருக்கும் மக்கள் சபைகளை நிறுவுவது முக்கியமாதுடன் இதற்காக கிராமப்புற தன்னார்வ அமைப்புகளைத் தொடர்புபடுத்த முடியும். அதன் மூலமாக அந்த அமைப்புகளின் செயல்பாடுகள் பாராட்டுதலுக்கு உட்படுகின்றன.
அந்த மக்கள் சபைகள் உள்ளூர் அதிகாரப் பிரிவிலுள்ள தன்னார்வ அமைப்புகளின் தலைவர்களையும் உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.

## நீதித்துறை

செல்வாக்குகள் அற்ற ஒரு பக்கச்சார்பற்ற, சுயாதீன நீதித்துறை நிறுவப்பட வேண்டும். நீதிச் சேவை ஆணைக்குழுவானது, ஒரு வலுவான நிறுவனமாக இருக்க வேண்டியுள்ளதுடன் அதற்கான நியமனங்கள் அரசியலமைப்புப் பேரவையால் மேற்கொள்ளப்பட வேண்டும்.
நீதித்துறையில் அரசியல் தலையீடுகள் இருக்கக்கூடாது.

சட்டத்துறையில் சிறுபான்மையினரின் பிரதிநிதித்துவமும் நிறுவப்பட வேண்டியுள்ளதுடன் அதற்காக நீதிச் சேவை ஆணைக்குழுவுக்குச் சிறுபான்மை குழுக்களின் பிரதிநிதியொருவர் நியமிக்கப்பட வேண்டும்.

## அரச நிதி

அரச நிதி நிர்வாகமானது பாராளுமன்றத்தினால் நிதி அமைச்சர் மூலம் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளதுடன் நிதி தவறாகப் பயன்படுத்தப்படுவதைத் தடுப்பதற்காக கணக்காய்வு ஆணைக்குழு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். இதற்காக, அரசியலமைப்பால் குறிப்பிட்ட ஏற்பாடுகள் வழங்கப்பட வேண்டும்.

## அரச பாதுகாப்பு

இயற்கைப் பேரழிவு, கிளர்ச்சிகள், கலகங்கள், தொற்றுநோய்கள் ஏற்பட்டால் பொது ஒழுங்கைப் பராமரிப்பதில் அல்லது மக்களின் வாழ்க்கைக்கு தேவையான பொருட்கள் மற்றும் சேவைகளை பராமரிப்பதில் தெளிவான ஆபத்து காணப்பட்டால் நிறைவேற்றுப் பிரதமருக்கு அவசரகாலநிலையைப் பிரகடனப்படுத்தக் கூடிய இயலுமை காணப்பட வேண்டும்.
ஒரு மாகாணத்தில் என்றால், மாகாண ஆளுநர், முதலமைச்சரின் அறிவுறுத்தலின் பேரில் அவசரகால நிலையைப் பிரகடனப்படுத்த வேண்டும்.
இவை அனைத்தும் பாராளுமன்றத்தின் அங்கீகாரத்திற்கு உட்பட்டதாக இருக்க வேண்டும்.

## ஏனைய விடயங்கள்

அரசியலமைப்பிற்கு முரணாக செயற்படும் சந்தர்ப்பத்தில் என்ன செய்ய வேண்டும் என்பதை அரசியலமைப்பில் சேர்க்க வேண்டும். அரசியலமைபபுச் சீர்திருத்தங்கள் செய்யப்படும்போது, அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு ஒரு குறிப்பிட்ட கால எல்லை குறிப்பிடப்பட வேண்டும். அவை செயலில் இல்லாதபோது, தானாக செயல்படும் ஒரு முறை அமைக்கப்பட வேண்டும். அரசியலமைப்பின் உறுப்புரைகள் மீறப்படுகையில் அதனை சவாலுக்குட்படுத்தி நீதிமன்றங்கள் மூலம் நிவாரணம் பெற முடியுமாகவிருத்தல் வேண்டும்.
அரசியலமைப்பிற்கு முரணாக செயல்படும்போது என்ன செய்ய வேண்டும் என்பது தெளிவாக வரையறுக்கப்பட வேண்டும். அரசியலமைப்புப் பேரவையால் வழங்கப்பட வேண்டிய நியமனம் நிறைவேற்றுப் பிரதமரின் விருப்பப்படி வழங்கப்பட்டால் அது சவாலுக்குட்படுத்தப்பட வேண்டும்.

அரச சார்பற்ற தேசிய செயற்பாட்டு முன்னணி
கொழும்பில்.
2020.12.28